# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
## விரிவாக்கக் கல்வி இயக்ககம், சென்னை
## ICAR - வேளாண்மை அறிவியல் நிலையம், நாமக்கல் - 637 002

இதழ் 4 | செய்தி மடல் | எண் : 2

ஏப்ரல் - ஜுன் 2019



**முதன்மை ஆசிரியர்**

முனைவர் **டி. ராமசாமி**
இயக்குநர்,
விரிவாக்கக் கல்வி இயக்ககம்

**ஆசிரியர்**

முனைவர் **ந. அகிலா**
முதுநிலை விஞ்ஞானி
பேராசிரியர் மற்றும் தலைவர்

**இணை ஆசிரியர்**

முனைவர் **சு. சத்யா**
விஞ்ஞானி / உதவிப் பேராசிரியர்
மண்ணியல் மற்றும்
வேளாண் வேதியியல்

**ஆசிரியர் குழு**

முனைவர் **சி. ஷர்மிளா பாரதி**
முனைவர் **பெ. முருகன்**
திரு. **கோ.ரா. புஷ்பநாதன்**
மருத்துவர் **சி. கதிர்வேலன்**
முனைவர் **சி. பால்பாண்டி**
முனைவர் **மா. டெய்சி**





நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் விவசாயிகள், இளைஞர்கள், சுய உதவிக்குழுக்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து வெளிவரும் புதிய தொழில்நுட்பங்களை வயல் வெளிசோதனை, முதல்நிலை செயல்விளக்கம், விழிப்புணர்வு முகாம் மற்றும் அறிவுரைகள் வழங்குதல் மூலம் கொண்டு சேர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. விவசாயிகள், பண்ணை மகளிர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோர்களின் அறிவியல் சார்ந்த தொழில்நுட்பங்களின் பயன்பாட்டுத்திறனை மேம்படுத்தும் பொருட்டு வேளாண்மை அறிவியல் நிலையம் பல்வேறு வகையான பயிற்சிகள், விழிப்புணர்வு முகாம்கள், கண்காட்சிகள், செயல்விளக்கங்கள் மற்றும் வயல் விழாவினை நடத்தியது. ஏப்ரல் முதல் ஜுன் 2019 வரை வேளாண்மை அறிவியல் நிலையம் செய்த முக்கிய பணிகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

**வேளாண்மை அறிவியல் நிலையம் பெற்ற விருதுகள்**



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வரும் நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் 2019-ம் ஆண்டு மே மாதம் 24 - 26 -ம் தேதிகளில் ஹைதராபத்திலுள்ள தேசிய வேளாண்மை ஆராய்ச்சி மேலாண்மை நிறுவனத்தில் வேளாண்மை தொழில்நுட்ப பயன்பாடு நிறுவனத்தால் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் மண்டலம் 10-ன் கீழ் இயங்கி வரும் வேளாண்மை அறிவியல் நிலையங்களுக்கு நடத்தப்பட்ட ஆண்டு அறிக்கை கூட்டத்தில் சிறந்த முறையில் நிக்ரா திட்ட (2018 - 19) செயலாக்கத்திற்கான விருதினை துவக்கவிழா 24.05.2019 -ம் நாளன்று இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் வேளாண்மை விரிவாக்கத்துறை துணை பொது இயக்குநர் அவர்களிடமிருந்தும், நிறைவு விழா 26.05.2019 -ம் நாளன்று சிறந்த முறையில் கே.வீ.கே. செயல்பாடுகளை வாய்மொழி முன்னிலைப் படுத்தியமைக்காகவும் மற்றும் சிறந்த விளம்பர பதகை முன்னிலை படுத்தியமைக்காகவும் இரண்டு விருதுகளை தெலுங்கானா வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்களிடமிருந்து பெற்றது.

இத்துடன் கிரைடா வளாகத்தில் ஜுன் 04 - 06-ம் தேதி நடைபெற்ற நிக்ரா ஆண்டறிக்கை கூட்டத்தில் "சிறந்த நிக்ரா வேளாண்மை அறிவியல் நிலையம் 2019" என்ற விருதினை பருவநிலை மாற்றங்களுக்கேற்ற வேளாண்மை முனைப்புத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை பாராட்டி இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தின் துணை பொது இயக்குநர் (வேளாண்மை விரிவாக்கம்) அவர்கள் வழங்கினார்.

**உலக சுற்றுபுற சூழலியல் தினம் - 2019**



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் கடந்த 05.06.2019 அன்று நிக்ரா கிராமமான ஜம்புமடை கிராமத்திலுள்ள அரசு உயர்நிலை பள்ளியிலும் வேளாண்மை அறிவியல் நிலையத்திலும் உலக சுற்றுபுற சூழலியல் தினத்தை கொண்டாடியது. பள்ளி மாணவர்களிடையே மரம் வளர்ப்பு, நெகிழி உபயோகத்தை குறைத்தல் மற்றும் சுற்றுபுற சீர்கேடு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு பள்ளி வளாகத்தை சுற்றி மரம் நடப்பட்டது. நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் மக்கள் தொடர்பு அதிகாரி அவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வேளாண்மை அறிவியல் நிலையத்தில் மரக்கன்றுகளை நட்டு விழாவினை சிறப்பித்தார்.

## ஐந்தாவது உலக யோகா தினம் - 2019



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 21.06.2019 அன்று ஐந்தாவது உலக யோகா தினம் 2019 கொண்டாடப்பட்டது. இதில் வேளாண்மை அறிவியல் நிலையத்தை சார்ந்த 40 விவசாயிகளும் 20 வேளாண்மை அறிவியல் நிலைய அலுவலர்களும் கலந்து கொண்டனர். நாமக்கல் மாவட்ட அரசு மருத்துவமனையிலிருந்து இரண்டு யோகா ஆசிரியர்கள் வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு வருகை புரிந்து பொது யோகாசனங்கள், பிராயணமா, மெடிட்டேசன் மற்றும் உடற்பயிற்சிகள் சம்பந்தமான விஷயங்களை காலை 8.30 மணிமுதல் 9.45 வரை கற்பித்தார்கள். யோகாசனங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்களும் கலந்து கொண்டவர்களுக்கு அத்தருணத்தில் வழங்கப்பட்டது.

## கால்நடைகளுக்கான மருத்துவ முகாம்



வேளாண்மை அறிவியல் நிலையத்தின் தத்து கிராமமான ஒண்டிக்கடையில் 25.06.2019 அன்று வேளாண்மை அறிவியல் நிலையமும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் கோழியின நோய் பகுப்பாய்வு மற்றும் கண்காணிப்பு ஆய்வகமும் இணைந்து கால்நடைகளுக்கான மருத்துவ முகாம் மற்றும் கால்நடைகள் பராமரிப்பு மற்றும் குடல்புழு நீக்கம் குறித்த பயிற்சியினை நடத்தியது. அத்தினம் 84 கறவை மாடுகள், 196 ஆடுகளுக்கு குடல்புழு நீக்கம், 78 நாட்டுக்கோழிகளுக்கு வெள்ளைக்கழிச்சல் நோய்களுக்கு தடுப்பூசிகளும் போடப்பட்டது. தாதுஉப்புக்கலவை, ஆண்டிசெப்டிக், குடல்புழு நீக்க மருந்துகள், பயிற்சி கையேடு ஆகியன வழங்கப்பட்டது. மொத்தமாக 83 கால்நடை வளர்போர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## இதர நிகழ்ச்சிகள்



வேளாண்மை அறிவியல் நிலைய அலுவலர்கள் விவசாயிகளுடன் இணைந்து கீழே கொடுக்கப்பட்டுள்ள அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் உறுதிமொழியை மேற்கொண்டனர்.

| விபரங்கள் | நாள் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| புகையிலை பயன்பாட்டினை தவிர்த்தல் குறித்த நிகழ்ச்சி | 31.05.2019 | 26 |
| ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவின் நிதி கல்வியறிவு விபரம் | 04.06.2019 | 55 |
| குழந்தை தொழிலாளிகள் குறித்த விழிப்புணர்வு தினம் | 12.06.2019 | 25 |

## கட்டணப் பயிற்சிகள்



மண்புழு உரம் தயாரித்தல் குறித்த ஒரு நாள் கட்டண பயிற்சி முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை சார்ந்த 17 மாணவ - மாணவியர்களுக்கு 27.05.2019 அன்று வேளாண்மை அறிவியல் நிலையத்தில் வழங்கப்பட்டது. மண்புழு உரம் தயாரித்தலின் அவசியம், புழு மற்றும் மட்கு குப்பை சேர்த்தல், நீர் மேலாண்மை, கழிவுகள் சேர்ப்பது, சலித்தல் மற்றும் தரம் பிரித்தல் சார்ந்த தொழில்நுட்பங்கள் அளிக்கப்பட்டது.

## உள்ளிடப்பயிற்சிகள்



கடந்த ஏப்ரல் 2019 முதல் ஜுன் 2019 வரை 16 உள்ளிடப்பயிற்சிகளை வேளாண்மை அறிவியல் நிலையம் 400 விவசாயிகளுக்கு வழங்கியது. சிறுதானிய உற்பத்தி, மதிப்புக்கூட்டுதல், சின்னவெங்காயம், மா சாகுபடி குறிப்புகள், இயற்கை வேளாண்மை, திரவ இயற்கை இடுப்பொருட்கள் தயாரித்தல், பசுந்தீவனம் உற்பத்தி செய்தல், ஹைட்ரோபோனிக் முறையில் பசுந்தீவனம் உற்பத்தி செய்தல், நிலக்கடலை, ஆமணக்கு, எள், தக்காளி, பழ மரங்கள், பருத்தி பயிர்களுக்கேற்ற ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை, காளான் உற்பத்தி தொழில்நுட்பங்கள், அடர்தீவனம் தயாரித்தல், வெள்ளாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, திலேபியா மீன் உற்பத்தி, அலங்கார மீன் வளர்ப்பு, மீனில் மதிப்புகூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல் ஆகிய தலைப்புகளில் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.

## களப்பணியாளர்களுக்கான பயிற்சிகள்



234 களப் பணியாளர்களுக்கு 16.04.2019 அன்று வேளாண்மை அறிவியல் நிலையத்தில் சின்ன வெங்காயத்தில் நவீன சாகுபடி குறிப்புகள் மற்றும் அறுவடை

பின்சார் தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பில் பயிற்சியளிக்கப்பட்டது. சின்னவெங்காயம் சாகுபடிக்கு நிலம் தயாரித்தல் முதல் அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள் வரை அனைத்தும் பயிற்சியளிக்கப்பட்டது.

**வெளியிடப்பயிற்சிகள்**



வேளாண்மை அறிவியல் நிலையத்தில் கால சூழ்நிலைகள் மற்றும் விவசாயிகளின் தேவைக்கேற்ப இரண்டு வெளியிடப்பயிற்சிகள் 72 விவசாயிகளுக்கு நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை மற்றும் மக்காச்சோளத்தில் படைப்புழு மேலாண்மை என்ற தலைப்பில் விவசாய நிலங்களில் வழங்கப்பட்டது.

**மண்டல மாதாந்திர பணிமனைக்கூட்டம்**



வேளாண்மை அறிவியல் நிலையம் 11.06.2019 அன்று வேளாண்மை சார்ந்த 43 களப் பணியாளர்களுக்கு மண்டல மாதந்திர பணிமனைக்கூட்டத்தை நடத்தியது. இக்கூட்டத்தில் பல்வேறு வட்டாரங்களிலுள்ள பிரச்சனைகள் குறித்தும் அதற்கேற்ற தீர்வுகளும் விவாதிக்கப்பட்டது.

**மண் மற்றும் நீர் பரிசோதனை மற்றும் மண்வள அட்டை வழங்குதல்**



வேளாண்மை அறிவியல் நிலையம் கடந்த ஏப்ரல் முதல் ஜுன் வரை 146 மண் மாதிரிகளும், 33 பாசன நீர் மாதிரிகளும், விவசாயிகளிடமிருந்து பெற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, 146 மண்வள அட்டைகளும், 33 பாசன நீர் வள அட்டைகளும் பரிந்துரைகளுடன் வழங்கப்பட்டது. மண்வளத்தை மேம்படுத்த ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகத்தை கடைப்பிடிக்க வலியுறுத்தப்பட்டது.

**கண்டுநர் சுற்றுலா - பட்டறிவு பயணம்**



கடந்த ஏப்ரல் - ஜுன் 2019-ல் 284 விவசாயிகளும், 61 பங்களாதேஷ் சிட்டஹாங் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக மாணவ, மாணவியர்கள் ஆக மொத்தம் 345 நபர்கள் வேளாண்மை அறிவியல் நிலையத்தை பார்வையிட்டனர். வேளாண்மை அறிவியல் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள வேளாண் மாதிரி திடல், கால்நடை மற்றும் மீன் வளர்ப்புகேற்ற பண்ணைகள் பற்றிய செயல் விளக்கமும் அறிவியல் நிலையத்தின் செயல்பாடுகள் குறித்த தொழில்நுட்ப உரையும் வழங்கப்பட்டது.

**வேளாண் இடுப்பொருட்களின் விலைப்பட்டியல் 2019 - 20**

| பொருட்கள் | விலை ரூ. |
|---|---|
| **அ. தீவன விதைகள் மற்றும் கரணைகள்** | |
| தீவன சோளம் (கோ.எப்.எஸ். 29, கோ-31) (கிலோ) | 410.00 |
| தீவன சோளம் (ஆப்பிரிக்கன் நெட்டை) (கிலோ) | 90.00 |
| வேலிமசால் (கிலோ) | 550.00 |
| குதிரைமசால் (கிலோ) | 600.00 |
| சூபாபுல் (கிலோ) | 300.00 |
| அகத்தி (கிலோ) | 500.00 |
| முயல் மசால் (கிலோ) | 400.00 |
| தீவன தட்டைப்பயறு (கிலோ) | 150.00 |
| கொழுக்கட்டை புல் (கிலோ) | 400.00 |
| கம்பு நேப்பியர் - (கோ - சிஎண் 4), (கோ - சிஎண் 5), (கரணை) | 0.75 |
| கினியா புல் (கோ - ஜிஜி 3) (கரணை) | 1.00 |
| **ஆ. கன்றுகள் (ஒரு செடியின் விலை)** | |
| மா இரகங்கள் (ஒட்டு இரகங்கள்) | 60.00 |
| மா இரகங்கள் (பங்கனப்பள்ளி, மல்கோவா, ரூபமணி, இமாம்பசந்த்) | 100.00 |
| மாதுளை (பகாவா) | 100.00 |
| மாதுளை (கனேஷ்) | 100.00 |
| எலுமிச்சை (நாட்டு இரகம்) | 100.00 |
| எலுமிச்சை (வீரிய இரகம்) | 100.00 |
| கொய்யா (லக்னோ 49) | 50.00 |
| சப்போட்டா (பிகேஎம்) | 50.00 |
| நாவல் (ஜம்பு) | 100.00 |
| நெல்லி (எண்ஏ 37) | 50.00 |
| **காய்கறி விதைகள் (விலை / 5 கிராம் பாக்கெட்)** | |
| தக்காளி (பிகேஎம் 1) | 10.00 |
| கத்தரி (வரிக்கதிரி) | 10.00 |
| மிளகாய் (கோவில்பட்டி) | 10.00 |
| வெண்டை (அர்கா அனாமிகா) | 10.00 |

| | |
|---|---|
| செடி அவரை (கோ ஜிபி 14) | 10.00 |
| கொத்தவரை (பூசா நவபாகர்) | 10.00 |
| புடலங்காய் (கோ 2) | 10.00 |
| புடலங்காய் (கோ 2) | 10.00 |
| பாகற்காய் (ஜெய்பூர் நெட்டை) | 10.00 |
| சுரைக்காய் (சிந்து சூரை, அர்கா பாஹர், பூசா நெட்டை) | 10.00 |
| **பயிர் பாதுகாப்பு பொருட்கள்** | |
| டிரைகோடெர்மா விரிடி (கிலோ) | 150.00 |
| டிரைகோடெர்மா ஹர்சியானம் (கிலோ) | 200.00 |
| வேம் உட்பூசனம் (கிலோ) | 60.00 |
| சூடோமோனஸ் ப்ளூரசன்ஸ் (கிலோ) | 150.00 |
| பிவேரியா பேசியானா (கிலோ) | 270.00 |
| மஞ்சள்வண்ண பொறி (எண்ணிக்கை) | 55.00 |
| நீலவண்ண பொறி (எண்ணிக்கை) | 55.00 |
| தென்னை சிகப்பு கூண் வண்டு பொறி (எண்ணிக்கை) | 120.00 |
| தென்னை காண்டாமிருக கூண் வண்டு பொறி (எண்ணிக்கை) | 250.00 |
| வேப்ப எண்ணெய் (லிட்டர்) | 400.00 |
| புங்க எண்ணெய் (லிட்டர்) | 200.00 |
| பஞ்சகாவ்யம் (லிட்டர்) | 100.00 |
| தேனீ பெட்டி மட்டும் (எண்ணிக்கை) | 850.00 |
| **உயிர் உரங்கள்** | |
| அர்கா கூட்டுநுண்ணுயிர் கலவை (கிலோ) | 185.00 |
| தேசிய அங்கக வேளாண்மை வேஸ்ட் டீகம்பேசர் (30 கிராம்) | 42.00 |
| மண்புழு உரம் (கிலோ) | 10.00 |
| மண்புழு உர வடிநீர் (லிட்டர்) | 25.00 |
| ஊட்டமேற்றிய எரு (கிலோ) | 20.00 |
| உயிர் உரங்கள் (கிலோ) | 55.00 |
| அசோலா தீவனம் (கிலோ) | 10.00 |
| **கால்நடைகள் & கோழி** | |
| நாட்டுகோழி (1 நாள் ஆனது) | 40.00 |
| நாட்டுகோழி (1 வாரம் ஆனது) | 50.00 |
| நாட்டுகோழி (2 வாரம் ஆனது) | 60.00 |
| நாட்டுகோழி (3 வாரம் ஆனது) | 70.00 |
| நாட்டுகோழி (4 வாரம் ஆனது) | 90.00 |
| வளர்ச்சியடைந்த நாட்டுகோழி (1 கிலோ) | 200.00 |
| கடக்நாத் (1 நாள் ஆனது) | 60.00 |
| மாடு - கலப்பின கன்று (6 மாதம் ஆனது) | 7000.00 |
| மாடு - கலப்பின கன்று (12 மாதம் ஆனது) | 16000.00 |
| மாடு - கலப்பின சினை (6 மாதம் ஆனது) | 30000.00 |
| மாடு - கலப்பின சினை (9 மாதம் ஆனது) | 36000.00 |
| **வெள்ளாடு / செம்மறியாடு** | |
| தலைச்சேரி, போயர், கலப்பினம், ஒஸ்மனாபாடி உயிருடன் (கிலோ) | 350.00 |
| செம்மறியாடு உயிர் எடை / கிலோ | 300.00 |
| **கலப்பின பன்றி / வெள்ளை யாக்ஷைர்** | |
| வயது 2 மாதம் 10 கிலோ எடை கொண்டது | 2500.00 |
| **மீன்** | |
| ஜிலேபி / பங்கேஷியஸ் (எண்ணிக்கை) | 3.50 |
| இறால் (1 மாதம் ஆனது) (எண்ணிக்கை) | 4.00 |
| கட்லா, ரோகு, மிர்கால் (எண்ணிக்கை) | 1.50 |
| மீன் உணவு (கிலோ) | 37.00 |
| **அலங்கார மீன்** | |
| அலங்கார மீன் (கிலோ) | 80.00 |
| கப்பி / மோளி (ஜோடி) | 10.00 |
| சண்டையிடுவான் சின்னது / பெரியது (ஜோடி) | 55.00<br>85.00 |
| ஏஞ்சல் (ஜோடி) | 65.00 |
| சுவார்டு டெய்ல் (எண்ணிக்கை) | 50.00 |
| **மண் மற்றும் நீர்** | |
| மண் மற்றும் நீர் பரிசோதனை (அடிப்படை பரிசோதனைகள்) | 100.00 |
| முழு மண் பரிசோதனை (1 மாதிரி) | 250.00 |
| முழு பாசன பரிசோதனை (1 மாதிரி) | 200.00 |
| இயற்கை எருக்கள் (1 மாதிரிக்கு) 1 காரணிக்கு பரிசோதனை | 250.00 |

**மேலும் தகவலுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

முதுநிலை விஞ்ஞானி
பேராசிரியர் மற்றும் தலைவர்
**ICAR** - வேளாண்மை அறிவியல் நிலையம்
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும்
ஆராய்ச்சி நிலைய வளாகம், நாமக்கல் - 637 002

இணையதளம் : www.kvknamakkal.com